# தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்

மலர்-4 திருவள்ளுவராண்டு - 2017 - மாசி - 2 14-2-1986 இதழ்-11


## மரபுக் கல்விக்கு ஊக்கம்

தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்கள் முதனான்கியலுக்குச் சேனாவரையர் உரையுடன் விளக்கும் அறிஞர் அவை 15.1.'86-ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கூடியது. பேராசிரியர்கள் ப.சு.மணியம், கு.திருமேனி, பா.அருணாசலம் நடுவராக இருந்தனர்.



பேராசிரியர் சிவசுப்பிரமணியம் அவர்கள் (சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்) திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைவுப் பரிசு 1000/- வெண்பொற்காசுகளும், முனைவர் செல்வகணபதி அவர்கள் (தருமபுர ஆதீனத் தமிழ்க் கல்லூரி, தருமபுரம்) உ.வே. சாமிநாதையர் நினைவுப் பரிசு 501/- வெண்பொற் காசுகளும் பரிசாகப் பாராட்டுடன்பெற்றனர். ஏறத்தாழ முப்பது பேராளர் வந்தமர்ந்தனர். பத்து பேர் மட்டும் பங்கெடுத்தனர். மற்றவர்கள் கேட்டு இன்புற்றனர். சிலர் தகுந்த வினா எழுப்பினர். ஒருசிலர் அவை நடப்பதைத் தெரிந்தறிய வந்ததாகக் கூறினர். சமற் கிருதம் மரபுப் படிப்பை மைய அரசின் உதவியுடன் மறு வாழ்வு பெருகச் செய்து வருகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழுக்குத் துணை செய்கிறது.

## புதிய வளாகத்தில் வங்கி

தென் வளாகத்தில் பாரத மாநில வங்கியின் கிளை யொன்றை மாண்புமிகு டாக்டர் வி.ஆர். நெடுஞ் செழியன் திறந்து வைத்தார்.

## திருக்குறள் கல்வெட்டு

திருவள்ளுவர் நாளன்று வள்ளுவர் குறளைக் கல்லெழுத்துக்களில் பொறித்து நட்டுப் புதிய வளா கத்தில் தமிழறிஞர்கள் இன்புற்றனர். பாயிர இயல் பற்றிய நாற்பது குறள்களும் இருபது கருங் கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. அலுவலகக் கட்டிட முன் பாதையில் நடப்பட்டுள்ளன.

## மகளிர் விடுதி அடிக்கல் நாட்டு விழா

மாண்புமிகு சி.அரங்கநாயகம் தலைமை தாங்க மாண்புமிகு வி.ஆர்.நெடுஞ்செழியன் அடிக்கல்லையிட்டு வாழ்த்தினார். புதிய வளாகத்தில் 1.2.'86 காலை பத்து மணிக்கு அமைதியான சூழலில் துவங்கிய விழாவில் அறிவியல் ஆக்கம், நோபல் பரிசு பெறுவது, பல்கலைக் கழக நல்கை முதலியவை இடம் பெற்றன.

ஏறத்தாழ 14இலட்சம் உருவாவில் உருவாகும் இந் விடுதிக்குப் பத்து இலட்ச உருவாவைப் பல்கலைக் கழக நல்கைக் குழு தந்திடும்.

## நூல் வெளியீடு



'காச நோய்'
- எழுதியவர் டாக்டர் அ.கதிரேசன்
'மூலிகைகள் ஆய்வு'
- தொகுத்தவர் டாக்டர் சாதிக்கும், சுரேந்திர குமாரும்.

இவ்விரு நூல்களை மாண்புமிகு திரு அரங்கநாயகம் வெளியிட மாண்புமிகு டாக்டர் வி.ஆர்.நெடுஞ் செழியன் பெற்றார்.

## மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு திரு செயகாந்தனுக்கு அளிக்கப்படுகிறது.

27.1.'86 அன்று கூடிய பரிசுத் தேர்வுக்குழு முற்பகலிலும் பிற்பகலிலும், தமிழ்நாட்டிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் இருந்து வந்த நூல்களைப் பரிசீலனை செய்து 1984-85ஆம் ஆண்டிற்குரிய தமிழ்ப் படைப்பிலக்கியப் பரிசைத் திரு செயகாந்தனுக்கு அளிக்கப் பரிந்துரை செய்தது. அதனை ஆளுநர் குழு இன்று ஒப்புக் கொண்டது.

'திரு த.செயகாந்தன் புதினம், சிறுகதை முதலிய படைப்பிலக்கியத்தில் புதிய பாதை வகுத்தவர். கதை மாந்தர்களை உயிர்த்துடிப்புடன் உருவாக்கிப் பலரால் பாராட்டப் பெற்றவர். அவர் படைப்புக்களில் நடை வேகமும், சொற்பொருத்தமும் இணைந்துள்ளன. நம்பிக்கை யூட்டும் நடப்பியல் பண்பை உருவாக்கியவர். மனித நேயம், மனிதவாழ்வு மற்றும் அடிமட்டத்து மக்களின் சிக்கல்களைத் திறம்பட வரைந்தவர். தமிழிலக்கிய வளர்ச்சியில் ஒரு தாக்குறவைத் தோற்றுவித்தவர்' என்றும் குழு கருத்தறிவித்தது.

மாமன்னன் இராசராசன் பரிசு, ஓர் இலட்சத்து ஓர் உருவா கொண்ட பன்னாட்டுப் பரிசாகும். பரிசளிப்பு விழாவில் இது விரைவில் வழங்கப்படும்.

## நிகழ்த்தப்படுவதற்குத்தான் நாடகம்



தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறைப் பேராசிரியர் திரு சே.இராமானுசம் அவர்களின் 'பேராசிரியர் கட்டில் தொடக்கவுரை' 24.1.'86 மதியம் 2.30 மணிக்கு மத்தியப்பிரதேச மாநில ரெங்கமண்டல் இயக்குநரான திரு பி.வி.கரந்த் அவர்கள் தலைமையில், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ.அய். சுப்ரமணியம் அவர்களின் முன்னிலையில் பல்கலைக் கழகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

கலைப்புலத் தலைவர் பேராசிரியர் கு.ஆ.தனபாண்டியன் அவர்களின் வரவேற்புரைக்குப்பின் தலைமையுரையில் திரு பி.வி.கரந்த் "நாடகம் என்பது நிகழ்த்தப் படுவதற்குத்தான். அதில் வெற்றி பெற்ற பிறகுதான் கோட்பாடாக்க முடியும்; நாடகம் என்பது நிகழ்காலத் தொடர்பானது; இன்றையத் தலைமுறையோடு சம்பந்தப் பட்டது; இப்பொழுது நாம் புதிய நாட்டிய சாத்திரம் எழுத வேண்டிய நிலையில் இருக்கிறோம். சேக்ஸ்பியர் ஆங்கிலேயர் என்பதால் அவரை விலக்கிவிட முடியாது. அவரது நல்ல நாடகங்களுக்காக அவரை நாம் ஏற்றுக் கொள்கிறோம்" என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து பேராசிரியர் இராமானுசம் அவர்கள் 'தமிழ் நாடகக்கலை மேடைமொழியாக்கம்' என்னும் தலைப்பில் தமது தொடக்கவுரையை நிகழ்த்தினார். அவர் தம்உரையில் "தமிழக மரபுக்கலை வடிவங்களின் சுருதியில் தமிழ் நாடகத்திற்கென ஒரு மேடைமொழியை உருவாக்கி அதனடிப்படையில் நவீன நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார். "அதற்குதவும் வகையில் தமிழகப் பாரம்பரிய மரபுக் கலை வடிவங்களிலிருந்து நடிகனுக்குரிய அடிப்படைப் பயிற்சிகளைத் தெரிவு செய்ய வேண்டும்" என்றார். இதனடிப்படையில் செயல்பட்டு உருவாக்கிய ஒருசில உடற்பயிற்சிகளை விளக்கினார்.

பழம்பெரும் நாடகம் மற்றும்திரைப்பட நடிகர் திரு டி.என்.சிவதாணு, சென்னைக் கூத்துப் பட்டறையைச் சேர்ந்த திரு ந.முத்துசாமி, சாந்திநிகேதனில் ஓவியம் மற்றும் நாடகத்தில் பயிற்சி பெற்ற கலைஞர் திரு பி.சீனிவாசன், மொழியியல் பேராசிரியர் முனைவர் சி.அரங்கன் ஆகியோர் இத்தொடக்கச் சொற்பொழிவைக் குறித்துத் தங்கள் கருத்துக்களைக் கூறினர்.

நிகழ்ச்சியின் முடிவில் நாடகத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் மு.இராமசுவாமி அவர்கள் நன்றி கூறினார்.

ஆந்திரம், தெலுங்கு என்ற சொற்கள் வேறு வேறு பொருள் குறிப்பன. ஆந்திர மரபினர் பிராகிருதம் பேசுபவர். தெலுங்கர் ஒரு மலை வாழ் இனத்தினர். தெலுங்குதேசம் என்று இன்று குறிப்பிடுவதும் திராவிட இனத் தொடர்பைக் குறிக்கும்.

– கட்டுரையாளர் ஒருவர்,
பன்னாட்டு திராவிட மொழியியற் கருத்தரங்கு,
திருவனந்தபுரம் 6-12. சனவரி 1986.

## தமிழ்ப் பல்கலைக் கழகச் சார்பில் நூல் மதிப்பாய்வுக் கலந்துரையாடல்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இலக்கியத்துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றும் து.சீனிச்சாமி எழுதி, தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள "தமிழில் காப்பியக் கொள்கை-முதற்பகுதி" என்ற நூல் பற்றிய மதிப்பாய்வுக் கலந்துரையாடல் ஒன்று, தமிழ்ப் பல்கலைக் கழகச் சார்பில் 2.2.'86 ஞாயிறு முற்பகல் 10.15 முதல் 1.30 வரை மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்றது. நூல் ஆசிரியர் முன்னிலையில் நூலைத் திறனாய்வுசெய்த இக்கலந்துரையாடலுக்குப் பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார். தியாகராசர் கல்லூரி முதல்வர் சுப.அண்ணாமலை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர் தமிழண்ணல், பேராசிரியர் ஆர்.சண்முகம், இணைப்பேராசிரியர் டி.எஸ்.நடராசன், விரிவுரையாளர் ஆர்.காசிராசன், ஆங்கிலத்துறை சார்ந்த இணைப்பேராசிரியர் மருதநாயகம், மதுரை பாத்திமா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மா.செண்பகம், கோடைக்கானல் பெண்கள் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் தேவதத்தா, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் பாலா, கோவை சி. பழனிச்சாமி ஆகியோர் நூலை மதிப்பீடு செய்தனர்.

தமிழ்க் காப்பிய உருவாக்கத்தில் உள்ள தமிழ் மரபுப் பின்னணி, காப்பிய இலக்கிய வளர்ச்சியில் அரசு உருவாக்கத்தின் பங்கு, ஒப்பிலக்கிய முறையில்இலக்கியத்தை ஆய்வதில் உள்ள பிரச்சனைகள், காப்பியங்களின் தனித் தன்மைகள் முதலியவை குறித்து கலந்துரையாடல் நிகழ்ந்தது. இறுதியில், பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள், சிறந்த காப்பியமாக ஒன்றை அறிவதற்குக் காப்பிய ஆசிரியனின் வடிவப் பார்வையை (Sense of Form) இனங்காண்பது பற்றி விளக்கினார். 3 மணி நேரத்திற்கு மேலாகநடைபெற்ற இக கலந்துரையாடலைத் தியாகராசர் கல்லூரி மாணவர்களும், ஆய்வு மாணவர் களும், ஆசிரியர்களும் மிக அமைதியுடனும், ஈடு பாட்டுடனும் கவனித்தனர். தமிழ்க் காப்பிய இலக்கிய ஆராய்ச்சி பற்றிக் கலந்துரையாடி மதிப்பீடு செய்த இந் நிகழ்ச்சி சிறப்பாக அமைய அனைத்து உதவிகளையும் கல்லூரி முதல்வர் சுப.அண்ணாமலை அவர்கள் செய்து தந்தார்கள்.

து.சீனிச்சாமி, இலக்கியத்துறை.

## கட்டிடங்கள் வளருகின்றன

மருத்துவமனைக் கட்டிடம், இப்போது உருவாகி வரும் நூல் நிலையம், தமிழ் இலக்கிய அலுவலகக் கட்டிடங்களை நிதி, கல்வி அமைச்சர்கள் 1.2.'86 -இல் பார்வையிட்டனர்.

திருவையாற்றில் உருவெடுக்கும் பண்பாட்டு மையம் இந்தியக் கலைகளின் இணைத்திடும் பாலமாக விளங்கும். பிற மாநிலங்களில் துணை மையங்கள் உருவாகும். நாம் ஒன்றுபட, பிற கலைகளை அறிய வேண்டும்.

மாண்புமிகு இராசீவ் காந்தி,<br>
பண்பாட்டு மையத் திறப்புவிழா,<br>
திருவையாறு, 31.1.'86.

## திரு எ:ப். ஜே. மார்ஷ் வருகை

இலண்டனிலுள்ள இந்திய அலுவலக நூலகத்தின் முதன்மை ஆவணப் பாதுகாப்பு அலுவலர் திரு எ:ப்.ஜே. மார்ஷ் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்



திற்கும், சுவடிப்புலத்திற்கும் 22.1.'86 ஆம் நாள் வருகை தந்தார். நூலகக் கட்டிடநிருமாணப் பணிகளையும் பார்வை யிட்டு, தம் கருத்துக்கள் சிலவற்றையும் தெரிவித்தார்.

## தொதுவரின் நடனம்

திருவள்ளுவர் நாள் விழாவையொட்டி, தொது வரின் நடனமொன்று நடந்தது. கால் வைப்பும் கையசைவும் இசை முழக்கமும் பரதக் கலையுடன் கொண்டுள்ள தொடர்பைக் காட்டின.

## தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடுகள் சில பாரதப் பிரதமருக்கு

தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தர் ஆளுநர் குரானா அவர்கள் திருக்குறளும் கணிப்பொறி ஆய்வும், மர இனப் பெயர்த் தொகுதி, மராத்திய கால சமுதாய அரசியல் வாழ்க்கை என்ற மூன்று நூல் களையும் பாரதப் பிரதமர் இராசீவ் காந்திக்கு வழங்கினார்.

## நூல் சீர்தூக்கல்

திரு கி.இராச நாராயனின் வட்டார வழக்கு அகராதியைத் திரு இராசாராம் முதலியவர்கள் சீர்தூக்கினர். அமைதியாகத் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் நடந்த இந்தக் கருத்தரங்கில் (26.1.86)ஆசிரியர் ஆக்க பூர்வமான கருத்துக் களை ஏற்றுக் கடுஞ்சொற்களை மலர்ந்தமுகத்துடன் நிராகரித்தார்.

வறுமை நீங்க, பொறியியல் மருத்துவப் படிப்பு அனைத்தும் தாய்மொழித் தமிழில்மாற்றிட வேண்டும்.

– மாண்புமிகு செ.அரங்கநாயகம்,<br>
மகளிர் விடுதிக் கால்கோள் விழா, தஞ்சை.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82XI

இ.அ.அ. மட்டும்.

40) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

## ஆங்கில ஆட்சியில் அறிவியல் வளர்ச்சி

'ஆங்கில ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் அறிவியலைத் தங்கள் ஆட்சியைப் பரப்புவதற்காகவே வளர்த்தனர்' என புதுடில்லி தேசிய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தின் அறிவியலறிஞர், டாக்டர் தீபக்குமார், மண்டபம் முகாமிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கமக நீரக ழாய்வு மையத்தில் 1986 சனவரி 19ஆம் நாள் நடந்த கூட்டத்தில் கூறினார். பெருநாட்டிலிருந்து சின்கோனா கொண்டுவரப்பட்டு, இந்தியாவில் வளர்க்கப்பட்டது பற்றியும், கௌரிசங்கர் என்னும் பெயருடன் விளங்கிய இமயமலைச் சிகரம் எவரெஸ்ட் எனப் பெயர் பெற்ற சுவையான வரலாற்றையும் எடுத்துரைத்தார். வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் தியோடலைட் அளவீடு பற்றி விரிவாக விளக்கினார்.

அடுத்துப் பேசிய தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல் தொழில் துறைப் பேராசிரியர் டாக்டர் விக்டர் இராச மாணிக்கம் செர்மானியர்கள் திருவனந்தபுரம் கடற்கரை மணலில் மானோசைட், இல்மினைட் ஆகியவை கலந்துள்ளதை எவ்வாறு கண்டுபிடித்தனர் என்பதையும், அவர்கள் கயிற்று வணிகம்மூலம் கடற்கரை மணலைப் பெற்றதையும் விரிவாக எடுத்துரைத்தார்.

செயலாற்று ஆய்வு இணையாளர் செ. இரெ. செயச்சந்திரன், சொற்பொழிவாளர்களை முதலில் கூட்டத்திருக்கு அறிமுகம் செய்து இறுதியில் நன்றி நவின்றார்.

—செ. இரெ. செயச்சந்திரன்,
மண்டபம் முகாம்.

---

சோழரின் புலிச் சின்னம் நாடு பிடிக்கும் சின்னம் மட்டுமன்று, மங்கலத்தையும் காட்டும் என்றும் ஊகிக்கலாம்.

மோகஞ்சதாரோ எழுத்தைக் கண்டுபிடிப்புச் செய்ய இந்தப் படவெழுத்து உதவும்.

வ. அய். சுப்பிரமணியம்,
—பன்னாட்டுத் திராவிட
மொழியியற் கருத்தரங்கு.

---

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

### காசநோய்

அ. கதிரேசன்

காச நோயின் விவரங்களைத் தாய் மொழியில் தெரிந்துகொண்டு பாதுகாப்புடன் வாழ்வதற்கு வழி செய்வது இந்நூல். மருத்துவப் பாட நூல்.

திம்மி 1/8 பக்கங்கள்: 329

விலை உரு. 115/-

### தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் ஓர் ஆய்வு

ஜ. சாதிக்
பொ. சுரேந்திரகுமார்

கும்பகோணம் வட்டத்தில் பயன்படுத்தப் படும் மூலிகைகள் பற்றிய ஒரு கள ஆய்வு நூல். மருந்துகளை உட்கொள்ளும் முறைகளும் விவரக் குறிப்புகளும் உள்ளன.

திம்மி 1/8 பக்கங்கள்: 79

விலை உரு. 22/-

### மர இனப் பெயர்த் தொகுதி

பெ. மாதையன்
எச். சித்திரபுத்தன்

ஒரு பொருள் பல சொல் என்ற அமைப்பில் மர இனப் பெயர்ச் சொற்கள் இவ்வகராதியின்கண் திரட்டிக் கொடுக்கப் பெற்றுள்ளன.

கிரவுன் 1/4 பக்கங்கள்: 555

விலை உரு. 200/-

### உடல், குரல், ஒலித்திணைப்பு

சே. இராமானுசம்
கு. முருகேசன்

மரபு வழியில் புதியதொரு நாடக மேடைப் படைப்பு மொழியை உருவாக்கத் தோன்றிய நூல். இது ஒரு நாட்பணிக் குறிப்பு.

திம்மி 1/8 பக்கங்கள்: 95

விலை உரு. 20/-

---

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்—613 001.